**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 19.01.2023**

**Case No : CC 148 / 2019**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** முத்துசெல்வன் | **Caste:** |
| **Father / Husband Name:** ராமச்சந்திரன் | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 44** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 19.01.2023**

முதல் விசாரணை:

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 1ம் எதிரியையும் தெரியும். ஏற்கனவே நகை மோசடி செய்தது சம்பந்தமாக கதிரவ ஆதித்தன் என்பவர் மீது நான் வழக்கு கொடுத்திருந்தேன். எதிரிகள் இருவரும் கதிரவ ஆதித்தனின் சித்தப்பா மற்றும் பெரியப்பா மகன்கள் ஆவார்கள். அதனால் 1ம் எதிரி என்னிடம் வழக்கினை தான் முடித்து தருவதாக மார்ச் மாதம் 2018 ம் வருடம் என்னிடம் சொன்னார். நான் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக சொன்னேன். அப்போது 1ம் எதிரி என்னிடம் வழக்கினை வாபஸ் வாங்குபம்படி சொன்னார். நான் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. பின்னிட்டு 6 மாதங்கள் கழித்து 12.4.2019 ம் தேதி இரவு 1.30 மணியளவில் ப.சா.3 காதர் மொய்தீன் என்பவர் வீட்டிற்கு சென்று 1ம் எதிரி அவரை தரக்குறைவாக பேசியுள்ளார். மறுநாள் காலை என்னுடைய மளிகைக்கடைக்கு வந்து ப.சா.3 இரவு நடந்ததை என்னிடம் சொன்னார். உன்னுடைய வீட்டிற்கு பால்கறக்க வருவதால்தான் 1ம் எதிரி தன்னை ஏசியதாக என்னிடம் சொன்னார். நான் உடனடியாக 1ம் எதிரிக்கு போன் செய்து கேட்டேன். அதில் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. பின் உடனடியாக சிறிது நேரத்தில் எதிரிகள் இருவரும் அரிவாளுடன் என் கடைக்கு வந்தார்கள். அப்போது எதிரிகள் இருவரும் என்னை தாக்கி 2ம் எதிரி என்னை கைகளால் முகத்தில் குத்தினார். 1ம் எதிரி அரிவாளைக் கொண்டு வெட்ட வந்தார். அப்போது

ப.சா.2 வெட்ட வேண்டாம் என சொல்லியும் அரிவாளை மாற்றி வைத்து தாக்கியதில் எனக்கு முதுகில் வீக்கக் காயம் ஏற்பட்டது. மேலும் முகம் முழுவதும் ரத்தக்காயம் ஏற்பட்டது. அதில் எனக்கு 2 பற்கள் கீழே விழுந்து விட்டது. கண்கள் இரண்டிலும் வீக்கக் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என்னை அருகிலிருந்த காதர் மொய்தீன், என் மனைவி ராஜகுமாரி, சுப்பிரமணியன் ஆகியோர்கள் என்னை படுக்கப்பத்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து உடன்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். சம்பவத்தின்போது கடையிலிருந்த 2 சேர்கள் உடைந்திருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்தவுடன் நான் ரோட்டில் மயங்கி கீழே விழுந்து விட்டேன் என்றால் சரிதான். அதனால் அதற்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரியல்ல. அதனால் யார் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று தெரியாது. அரசு மருத்துவரிடம் காயம் குறித்து யார் சொன்னார்கள் என்று தெரியாது. சிகிச்சைக்கு அழைத்து சென்ற விபரங்கள் பின்னிட்டு என் மனைவி சொல்லி தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்றே இரவு 10.00 மணியளவில் மயக்கம் தெளிந்தது. அதன் பின்புதான் நான் தூத்துக்குடி மருத்துவமனையில் இருந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் இரண்டு எதிரிகளும் வந்து வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு சொல்லவில்லை என்றால் சரிதான். ப.சா.3 ன் வீட்டிற்கு எதிரிகள் சென்ற விபரம் மறுநாள் காலை தெரியும். அதுசம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. போலீசாரிடம் எனக்கும் 1ம் எதிரிக்கும் அவதூறு வார்த்தைகளால் வாக்குவாதம் ஏற்பட்டதாக விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த வாகனத்தில் எங்கிருந்து வந்தார்கள் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடை முன்பு சாலையில் எவ்வளவு நேரம் தகராறு நடந்தது என்றால் 1 நிமிடம் நடந்தது. எதிரிகள் கடைக்குள் போகவில்லை என்றால் சரிதான். ப.சா.3 க்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. கதிரவ ஆதித்தன் என் உறவினர் என்றால் இல்லை. அவரிடம் நான் ஓட்டுனராக பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட

**பகை காரணமாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடை உள்ளே எந்த பொருளும் சேதம் ஆகவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் தெரிவித்ததை தான் காவல்துறை விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.**

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 19.01.2023**

**Case No : CC 148 / 2019**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** பாலகிருஷ்ணன் | **Caste:** |
| **Father / Husband Name:** ராமக்கனி | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 61** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 19.01.2023**

முதல் விசாரணை:

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து திருவிழாவில் வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 1ம் எதிரியையும் தெரியும். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்போது திருவிழா கடையில் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசுதரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காததால் அரசுதரப்பு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 13.4.2019ம் தேதி காலை 9.30 மணிக்கு அ.சா.1 அவருடைய கடையில் இருந்தபோது எதிரிகள் இருவரும் அ.சா.1ன் கடைக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து கை மற்றும் அரிவாளால் அ.சா.1 ஐ தாக்கி கடையிலிருந்த பொருட்களை எதிரிகள் அடித்து சேதப்படுத்தினார்கள் என்றும் பின்பு நான் மற்றும் ப.சா.3 இருவரும் சேர்ந்து சத்தம்போட்டு அவர்களை விலக்கி விட்டதாக அப்போது எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ கொலைமிரட்டல் விடுத்ததாகவும் பின்பு அ.சா.1 ஐ 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு சேர்த்ததாக காவல்துறை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to

be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 19.01.2023**

**Case No : CC 148 / 2019**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** காதர் மொய்தீன் | **Caste:** |
| **Father / Husband Name:** நயினா முகம்மது | **Calling:** |
| **Village:** படுக்கப்பத்து | **Religion:** |
| **Taluk:** சாத்தான்குளம் | **Age: 62** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 19.01.2023**

<u>முதல் விசாரணை:</u>

நான் படுக்கப்பத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 1ம் எதிரியையும் தெரியும். அ.சா.2 ஐ தெரியும். கடந்த 12.4.2019 அன்று இரவு 1.30 மணியளவில் 1ம் எதிரி என் வீட்டிற்கு வந்து வெளியே நின்று சத்தம் போட்டு ஏசிக்கொண்டிருந்தார். நான் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. உடனே உடன் வந்த நபர்கள் அவரை அழைத்து சென்று விட்டார்கள். பின்பு மறுநாள் காலை 7.30 மணிக்கு நான் அ.சா.1ன் கடைக்கு சென்று அ.சா.1ன் மாட்டில் பால் கறக்க செல்லக்கூடாது என 1ம் எதிரி சொன்னதாகவும் அதனால் நான் இனி வரமாட்டேன் என்றும் வேறு ஆளை பார்த்துக்கொள்ளும்படி நான் அ.சா.1யிடம் சொன்னேன். பின் காலை 9.00 மணிக்கு அ.சா.1ன் கடைக்கு பொருட்கள் வாங்குவதற்கு சென்றேன். அப்போது எதிரிகள் இருவரும் அ.சா.1ன் கடைக்கு வந்து அரிவாளின் பின்பகுதியால் அ.சா.1 ஐ தாக்கினார்கள். அதில் அ.சா.1க்கு கண், வாய் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. சாலையில் அ.சா.1 கிடந்தார். நான் அ.சா.1ஐ உடன்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். பின் மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

சண்டையை விலக்கி விட நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால்

சரிதான். என்னை யாரும் ஏசவில்லை என்றால் சரிதான். நான் கடையின் வெளியே சேரில் உட்கார்ந்திருந்தேன். படுக்கப்பத்து மருத்துவமனைக்கு அ.சா.1 ஐ எந்த வாகனத்தில் கொண்டு சென்றோம் என்றால் ஞாபகமில்லை. படுக்கப்பத்து மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. படுக்கப்பத்து மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் அரைமணி நேரத்தில் வந்தது. உடன்குடி மருத்துவரிடம் அ.சா.1 தான் காயங்கள் குறித்து சொன்னார் என்றால் சரிதான். பின் தூத்துக்குடி மருத்துவமனைக்கு சுப்பிரமணியன் நான் மற்றும் அ.சா.1 ன் மனைவி ஆகியோர் அழைத்து சென்றோம் என்றால் சரிதான். போலீசார் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என் வீட்டில் நடந்த சம்பவம் குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. அ.சா.1 இருசக்கர வாகனத்தில் செல்லும்போது கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்து அதில் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(Sd)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.